

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சியில் 6,தார் சாலை , 6, சிமெண்ட் சாலை 2 பாலம், 1 பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணிகளை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார். உடன் ஆவடி மேயர் உதயகுமார் மாநகராட்சி ஆணையர் சரண்யா, ஜி.ராஜேந்திரன், அமுதா பேபி சேகர், சன் பிரகாஷ், பேபி சேகர், எம்.குமார், மீனாட்சி, மற்றும் அரசு அதிகாரிகள் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 18.12.2025 அன்று திறக்கவுள்ள வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.6.30 கோடி திட்ட மதிப்பீட்டில் கொளத்தூர், பொரியார் நகர் அமுதம் அங்காடியை நேற்று (12.12.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் பாலமுருகன், ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர்கள் எ.நாகராஜன், திருமதி.ஸ்ரீதணி, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐ.சி.எப்.முரளிதரன், மகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் சொக்கலிங்கம், செயற்பொறியாளர் சதீஷ்குமார் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 296 வது நாள்!

## அம்பத்தூர் கிழக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



*சென்னை, டிச.13-*

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 296 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (12.12.2025), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 83அ, RK லிங்க் சாலை, தாதம்குப்பம், வில்லிவாக்கம், 2) வட்டம் 83, வினாயகர் கோவில் அருகில், சிவலிங்க புரம், கொரட்டூர், அக்கிரஹாரம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர் காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

‘இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு. மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டு மக்களை பெரிதும் கொந்தளிக்க வைத்துள்ள

# கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்த காரணம் என்ன?

## ஒன்றிய அரசுக்கு கே.இ.பிரகாஷ் நாடாளுமன்றத்தில் கேள்வி!



*புதுடெல்லி, டிச.13-*

மக்களவையில் ஈரோடு தொகுதி கழக உறுப்பினர் கே.இ.பிரகாஷ் எழுப்பிய கேள்வி வருமாறு:-

கோவை மற்றும் மதுரைக்கு மெட்ரோ ரயில் கொண்டுவருவதற்கான தமிழ்நாடு அரசின் பரிந்துரையை நிராகரித்தது ஏன் என்று, ஒன்றிய அரசிடம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினேன். இதில், கோவை, மதுரைக்கு மெட்ரோ நிராகரிக்கப்பட்ட நிலையில், எப்படி அதே போன்ற ஆக்ரா, போபால், இந்தூர், நாக்பூர் நகரங்களுக்கு மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்று வினவியிருந்தேன்.

தமிழ்நாட்டு மக்களை பெரிதும் கொந்தளிக்க வைத்துள்ள இந்த விவகாரத்தில், ஊடகங்களில் பேசுவதைப் போல் அல்லாமல் நாடாளுமன்றத்திலேனும் சரியான, நியாயமான பதிலை ஒன்றிய அரசு அளிக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், மீண்டும் இட்டுக்கட்டிய பொய்கள் மற்றும் உதவாத முன்முடிவுகளையே பதிலாக அளித்துள்ளது ஒன்றிய அரசு.

**தந்திரமான பதில்; சுதந்திரமான ஆய்வுக்கும் உடன்பாடில்லை!**

கோவை, மதுரைக்கான மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்ததற்கான காரணங்களில், தந்திரமாக ‘மக்கள் தொகை 20 லட்சத்திற்கும் குறைவாக இருக்கிறது’ என்ற வார்த்தையை தவிர்த்திருக்கிறது ஒன்றிய அரசு. இதைக் குறிப்பிட்டால், கோவை, மதுரை போன்றே மக்கள் தொகை கொண்ட ஆக்ரா, போபால், இந்தூர், நாக்பூர் போன்ற நகரங்களுக்கு மட்டும் மெட்ரோவுக்கு அனுமதி அளித்தது எப்படி என்பதை அவர்கள் சொல்லியாக வேண்டும்.

மாநில அரசு குறிப்பிட்ட அளவு மக்கள் பயணிக்க மாட்டார்கள், மாநில அரசு குறிப்பிட்ட இடங்களில் இருந்து மக்கள் வரமாட்டார்கள், மெட்ரோ அமைக்க வழிகள் இல்லை, இந்த மக்கள்தொகைக்கு பேருந்து சேவையே போதும் என, அடுக்கடுக்கான பொய்களையும் முன்முடிவுகளையுமே காரணங்களாக அடுக்கியிருக்கிறார்கள்.

இதை முன்கூட்டியே உணர்ந்து தான், தமிழ்நாடு அரசு அளித்த திட்ட அறிக்கையை சுதந்திரமான அல்லது மூன்றாம் நபர் ஆய்வுக்கு உட்படுத்த தயாரா என்று கேள்வியில் கேட்கப்பட்டது. இது பற்றி ஒரு வார்த்தையும் சொல்லாமல் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

**கோவையையும் மதுரையையும் அவமதிக்கும் ஆணவம்!**

தனது பதிலில் வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை தமிழ்நாட்டின் மான்செஸ்டரான கோவையையும், கோயில் நகரமான மதுரையையும் அவமதித்திருக்கிறது ஒன்றிய அரசு. இந்த இரண்டு நகரங்களும் பொருளாதார அளவில் பல மடங்கு முன்னேற்றம் கண்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் தனித்த, தெளிவான திட்டங்களின் வாயிலாக இது நடந்தேறி வருகிறது.

இப்படியிருக்க, தனது பதிலில் கோவை, மதுரையில் இவ்வளவு பேரெல்லாம் மெட்ரோவில் பயணிக்க மாட்டார்கள், இந்த நகரங்களுக்கு பேருந்தே போதுமானது என்று திரும்ப திரும்பச் சொல்கிறது ஒன்றிய அரசு. இது, தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் ஜிடிபிக்கு தங்களின் உழைப்பின் மூலம் முக்கியப் பங்கு அளிக்கும் கோவை, மதுரை மக்களை அவமதிக்கும் செயல். மேலும், இந்நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மெட்ரோவுக்கான DPRயை தயாரித்த உள்ளாட்சி அமைப்புகளின் பணிநேர்மையையும் அவமதிக்கும் போக்கு.

ஒன்றிய அரசுக்கு தமிழ்நாட்டில் இருக்கும் அத்தனை மக்களும் ஒரே வரியைத்தான் உரக்கச் சொல்கிறார்கள். இந்தியாவில் இன்றைய தேதிக்கு மெட்ரோவுக்கு தகுதியான முதன்மை நகரங்கள் கோவையும் மதுரையுமே. ஒன்றிய அரசே விரைந்து செயல்படு.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்து பேசினார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூந்தமல்லி கிழக்கு ஒன்றியம் சார்பில் ஆலோசனைக் கூட்டம் சென்னீர்குப்பத்தில் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி 14–ஆம் தேதி நடைபெறும் இளைஞரணி சந்திப்பு கூட்டத்தில் பங்கேற்பது குறித்தும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி நடத்துவது குறித்தும் சிறப்புரையாற்றினார். உடன் ஏ.ஜனார்தனன், புகழேந்தி, பாஸ்கர், பிரபாகரன்.வி.பி. பிரகாஷ், கூ.பரிமேலழகன், என்.சண்முகம், ராம்பாபு, திருமலைராஜ், ஸ்டாலின், திருலோசுசுந்தர், பாலா, ராஜாராம், விக்னேஷ், துரைமுருகன், துவாரகேஷ், லிங்கேஷ்குமார் பாபு, ஞானமூர்த்தி, முருகன், உள்பட பலர் உள்ளனர்.



“என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி” ஆலந்தூர் வடக்கு பகுதி 160–வது வட்ட கழகத்தின் சார்பில் 230, 234 பாகங்களில் பாகமுகவர்கள் வி.ராஜா, இரா.அற்புதராஜ் தலைமையில் 160வது வட்ட கழக செயலாளர் கே.பி.முரளிகிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பகுதிச் செயலாளர் ப.குணாளன், பாக பொறுப்பாளர் ஆர்.டி.பூபாலன் பி.எம்.பிருந்தா, ஸ்ரீ எம்.சி., ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இதில் கு.கலாநிதி தி.மு.காமராஜ், இ.உதயகுமார், க.சாந்தி, கோ.ராஜ்வேல், சே.விக்கி, எஸ்.சகிம்சா, ஆர்.எஸ்.சரவணன், ஏ,ஆர்.ஸ்ரீதர், காஜா மொய்தீன், கவி, சீ.செந்தில், ஆர்பர் எம்.குமார், பாருக், வெல்டிங், ரவி, கல்யாணி, ரம்ஜான், சி.நாகராஜ், சசி, பாலமுருகன், ஷரிப்கான், தினேஸ், நாகப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ் நாட்டின் கைத்தறி –

# நெசவாளர்களின் துயரைத் துடைக்க ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மக்களவையில் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



*சென்னை, டிச.13-*

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 11 டிசம்பர் 2025 அன்று மக்களவையில், தமிழ் நாட்டின் கைத்தறி நெசவாளர்களின் இன்னல்கள், ஒன்றிய அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? என்றும், அவர்களின் துயரைத் துடைக்கும் முயற்சிகளை எடுக்க இயலுமா? என்றும். மக்களவை தலைவர் ஓம் பிர்லா அவர்களிடம் நாடாளுமன்ற விதி எண்.377ன் படி வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் அவர் கூறியதாவது:-

தமிழ் நாட்டில் கைத்தறி நெவாளர்கள் சந்தித்து வரும் இன்னல்களை, அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக, இந்த மக்களவையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன் என்றும், நான்கு இலட்சம் குடும்பங்களுக்கு மேல் வாழ்வாதாரம் அளித்து வரும் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வை மேம்படுத்த ஒன்றிய அரசு ஏதேனும் முயற்சிகள் எடுக்குமா? என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

தமிழகத்தின் பெருமை வாய்ந்த, சிறப்புமிக்க காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், மதுரை சுங்கடி புடவைகள், செட்டிநாடு பருத்தி புடவைகள், சேலம் வேஷ்டிகள் ஆகியவை கிராமப்புற நெசவாளர்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பதோடு அவற்றின் செய் நேர்த்திக்காகவும் புகழ் பெற்றவை.

ஆனால் இந்த நெசவாளர்களின் வாழ்க்கை, எண்ணற்ற துயரங்களோடு உட்படுத்தப்பட்டு கேள்விக்குறியாகியுள்ளது.

விசைத்தறியாளர்களுடன் போட்டி போடும் நிலை, இயந்திங்களால் உற்பத்தி செய்யப்பட்ட விலை குறைந்த துணிகள், சந்தை வாய்ப்புகள் இல்லாத நிலைமை, குறைந்த வருமானம், நீண்ட நேர வேலைப் பளு, உடல் சுகாதார பிரச்னைகள் என எண்ணிலடங்கா இன்னல்களை கைத்தறி நெசவாளர்கள் சந்தித்து வருகின்றனர்.

விழிப்புணர்வு இல்லாமை, வழிகாட்டு நெறிமுறை சிக்கல்கள், உறுதியி;ல்லாத செயல்பாடுகள் இவற்றினால், அரசின் நெசவாளர்களுக்கான நலத் திட்டங்கள், கைத்தறி நெசவாளர்களை சென்று அடைவது இல்லை, என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

காதி மற்றும் கிராமப்புற ஆணையத்தால் உருவாக்கப்படும் துணி ரகங்களுக்கு, சேவை மற்றும் சரக்கு வரியிலிருந்து ஒன்றிய அரசு விலக்கு அளிக்கும் அதே நேரத்தில், கைத்தறி நெசவாளர்கள் ஐந்து சதவீத வரிக்கு கட்டாயப் படுத்தபடுகிறார்கள். எனவே கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் வழங்கவும், சந்தை வாய்ப்புகளை அதிகப்படுத்தவும், சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்கவும். உடனடியான முயற்சிகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அவர்களிடம், நாடாளுமன்ற விதி எண். 377ன் கீழ், அரக்கோணம் திமுக நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்கள், மக்களவையில் வேண்டுகோள் விடுத்தார்.



திருவள்ளூர் தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் நகராட்சி ராஜாஜி சாலையில் உள்ள நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பெருமாள் செட்டி தெருவில் உள்ள பள்ளியில் படிக்கும் 248 மாணவ – மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் வழங்கினார். உடன் நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், முதன்மை கல்வி அலுவலர் கற்பகம், மாவட்ட கல்வி செயலாளர் அமுதா, தலைமை ஆசிரியர்கள் முரளி, வினோலினா ஹெப்சிபா மற்றும் கழக நிர்வாகிகள் ஆசிரியர்கள் கவுன்சிலர்கள் உள்ளனர்.




சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி
41வது வட்ட திமுக சார்பில்
இளைஞர்களின் எழுச்சி நாயகர்,
மாண்புமிகு தமிழக துணை முதல்வர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு
பொதுகூட்டம் (ம) நலத்திட்ட நிகழ்ச்சி
நாள் : 13.12.2025, சனிக்கிழமை, மாலை : 6.00 மணி
இடம் : வைத்தியநாதன் சாலை, தண்டையார்பேட்டை, செ-81.
தலைமை கி.தேவன் 41 வட்ட செயலாளர்
முன்னிலை
எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் B.A.,B.L.,
ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர்
பகுதி நிர்வாகிகள்
மாஸ்டி.வெங்கடேசன் மு.கோவிந்தராஜ் எம்.லோகநாதன்
டி.திராவிடசெல்வி பி.சீனிவாசன்
மாவட்ட பிரதிநிதிகள்: ஜி.ராஜா டி.சங்கர் மீஞ்சூர்முகுந்தன்
கே.ஜானகிராமன் எஸ்.ஜான்கென்னடி கே.கோதண்டம் ஏ.தனசேகர்
வரவேற்புரை மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள்
ஆர்.எ.எம்.சசிகுமார் எஸ்.எல்.சுந்தர் ஜி.ஏழுமலை ஆர்.ராஜன்
41 வது வட்ட நிர்வாகிகள்
எஸ்.குணசேகரன் அண்ணாநகர் என்.முருகேசன் எஸ்.நரேந்திரகுமார் கி.தனலட்சுமி
ப.தேவராஜ் கே.அரிபாபு என்.லோகநாதன் ஜி.உமா பி.தன்ராஜ் இ.ரங்கநாதன்
சிறப்புரை
கோ.வி.லெனின்
தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர்
ஆர்.டி.சேகர் MLA
சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர், பெரம்பூர்சட்டமன்றதொகுதி
Dr. கலாநிதிவீராசாமி MP
வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
ஜே.ஜே.எபினேசர் MLA
ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர்– அமைப்பாளர். செ.வ.மா.இ.அ
இரா.லட்சுமணன் கே.வி.லோகேஷ் சிவாஜிகிருஷ்ணமூர்த்தி
என்.மருதுகணேஷ் நேதாஜியு.கணேசன்MC ஏ.மணிமேகலைMC செ.ஜோதி
ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 41வது வட்ட திமுக